**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இன்று (10.8.2011) வினாக்கள் – விடைகள் நேரத்தின் போது, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள் எழுப்பிய வினாவிற்கு அளித்த பதில்**

**வினா:**

(அ) திருமங்கலம் தொகுதி, பேரையூர் வட்டம், டி. கல்லுப்பட்டியில் தீயணைப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் விடை:**

திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டியைச் சுற்றி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் வத்திராயிருப்பு, கள்ளிகுடி, மயிலாடும்பாறை மற்றும் உசிலம்பட்டி ஆகிய நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மேற்கண்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலைய ஊர்திகளைக் கொண்டே இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கொள்ள இயலும்.

எனினும், டி. கல்லுப்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் குடிசை வீடுகள் உள்ள காரணத்தாலும், மேலே குறிப்பிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்களில் இருந்து டி. கல்லுப்பட்டி செல்லும் சாலைகள் நல்ல நிலையில் இல்லாததால், தீயணைப்பு வண்டிகள் விரைந்து செல்ல இயலாத காரணத்தாலும், டி. கல்லுப்பட்டியில் ஒரு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு நீர் தாங்கி வண்டி வழங்கப்படும். அவ்வாறு ஒரு நீர் தாங்கி வண்டியை அதற்குரிய உபகரணங்களுடன் வாங்க 25 லட்சம் ரூபாயும் மற்றும் தளவாடங்களுக்கு 1 லட்சம் ரூபாயும், ஆக மொத்தம் 26 லட்சம் ரூபாய் தொடரா செலவினமாக அனுமதிக்கப்படும். இந்தத் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு ஒரு தீயணைப்பு அலுவலர், 2 முன்னணி தீயணைப்போர்கள், ஒரு இயந்திர கம்மியர் ஓட்டி, அதாவது, Driver Mechanic, 2 தீயணைப்போர் ஓட்டுநர்கள் மற்றும் 11 தீயணைப்போர்கள் ஆகிய பணியாளர்கள் ஒப்பளிப்பு செய்ய, மற்றும் கட்டட வாடகை ஆகியவற்றுக்கு தொடர் செலவினமாக ஆண்டு ஒன்றுக்கு ,50 லட்சம் ரூபாயும் அனுமதிக்கப்படும்.

******